# திராவிடநாடு

4—9—60 | வார வெளியீடு | விலை 16 காசு


# வீறுகொண்டெழு!

—[ப. கதிரவன்]—

—[●]—

வீரமே தமிழர் சொத்து
    விவேகம் அவர்க ளுடைமை
போரெனில் எழுவார் உடனே
    பூரித்தே செல்வார்; வெல்வார்!

ஆற்றல்மிகு தமிழர் கூட்டம்
    ஆர்த்தெழின் பகைமை மாயும்
ஏற்றம்மிகு தமிழன் எழுந்தால்
    இழிவெலாம் சரியும்; சாயும்!

"கல்லேற்றி வந்த காட்சி"
    கண்முன்னே தோன்றி நித்தம்
உள்ளத்தில் எழுச்சி சேர்த்து
    உணர்வினைப் பெருக்கும் நாளும்!

அத்தகு தமிழன் இன்று
    அடிமையாய் வாழல் நன்றே?
கொத்தடிமை தீரத் தமிழா
    கோதித்துநீ எழுக இன்றே!

# அந்திக் கலம்பகம்

சி. என். ஏ.

நாளைக்குச் சீக்கிரம் வா பொன்னி முத்தழகி விஷயம் தெரிந்தாகவேண்டும்; சுவையான இடத்திலே நிறுத்திவிட்டுப் போகிருயே-ஆவலாக இருக்கிறது; கதையைக் கேட்க என்று சொல்லிவிட்டு, வத்சலா எங்கே போய்விட்டாளோ தெரியவில்லை? வந்துசேர, எவ்வளவு நேரமாகுமோ...? நான் வீட்டுக்குப் போய்விட்டு நாளைக்கு வரட்டுமா, ஏமலதா!

அதென்ன பொன்னி! அப்படிச் சொல்கிறயே! அப்படியானு வத்சலா தான் ஒசத்தியோ...?

ஏமலதா! ஏன் வீணுகத் துரும்பைத் தூணுக்கிற பேச்சுப்பேசறே...

நீ எப்படி, வத்சலா இங்கே இல்லை; அதனுலே நான் வீட்டுக்குப் போகிறேன் என்று சொன்னே? அவ, இல்லாவிட்டாஎன்ன? நீ, சொல்லு கதையை... எனக்கு மட்டும் விருப்பம் இல்லையா, கதையைக் கேட்க. சொல்லு, சொல்லு...

அவ, இல்லாமலா? போதுமே! வந்ததும், மறுபடியும்,கதையை முதலிலே இருந்து சொல்லு என்றல்லவா வத்சலா உயிரைவாங்குவா! இரட்டிப்பு வேலையா, எனக்கு... வேண்டாமே! வத்சலா, வந்துவிடட்டும், பிறகு, கதையைக் கேட்கலாம்...

அதுவும் ஒருவிதத்திலே சரிதான். இதைமட்டும் சொல்லு பொன்னி! இந்த முத்தழகி என்கிறவ, யாரு?

அதைச் சொன்னு, கதை சொல்றதாத்தானே அர்த்தம்?

முத்தழகி என்கிற பேர் இருக்கே, அது எவ்வளவு நல்லா இருக்கு தெரியுமோ...

அவளும் ரொம்ப அழகானு பொண்ணுதான்.

தங்கத்தாமரையை விடவா, இவ அழகு? அது எப்படி இருக்கமுடியும்? தங்கத்தாமரைதானே, கதாநாயகி!

ஆமாம்... கதாநாயகிதான் எல்லாப் பெண்களையும்விட அழகா இருக்கவேண்டும்னு, சட்டமா என்ன?

சட்டம் இருக்கோ இல்லையோ. எந்தக் கதையிலேயும் கதாநாயகிதான் அழகின்னு, சொல்வதுதானே முறை.

முறை அப்படி



இருக்கலாம் — ஆனா, சட்டமாக ஆக்கிவிடத் தேவையில்லையே... தங்கத்தாமரையும் அழகுதான்... முத்தழகியும் அழகிதான்...

அவளுடைய பெயரே அழகின்னு தானே இருக்கு!

அதுமட்டுமா, முத்து அழகானதல்லவா!

ஆமாம்! முத்துமாலை வாங்க வேணும் வாங்கவேணும்னு, என்க்கு ரொம்பநாளா ஆசை. உம்! இருந்து!!

ஏன், பலிக்கவில்லையோ, உங்க வீட்டுக்காரரிடம்! அவர்தான், நீ, எள் என்று சொல்வதற்குள்ளே எண்ணெய் கொண்டுவந்து விடுவாரே...

நீதான் மெச்சிக்கொள்ளவேண்டும் அவருடைய குணதிசயத்தை. வெளியே சொன்னல் வெட்கக்கேடு என்று, நான் எதையும் சொல்லுவதில்லை, பொன்னி! வரவர, அவருடைய சுபாவமே, மாறிக்கொண்டு இருக்கு...

முத்துமாலை வாங்கித்தரவில்லை என்ற உடனே, இவ்வளவு கோபமும் வெறுப்புமா கொள்வது...?

போடி! கோபம், உனக்கு வரவே வராதா! உன்னோட வீட்டுக்காரரை நீ, ஏதாவது கேட்டு, அவர் வாங்கிக் கொடுக்காவிட்டா, பிராணநாதா! இதல்லவா, அன்பின் அடையாளம். அடியாள் கேட்டதை வாங்கித்தர மறுத்த, உங்களுடைய, திருவடியைத் தொட்டுக் கும்பிடுகிறேன், என்று பூஜை செய்வயோ...?

என்னடியம்மா பலமான விவாதம், பூஜை விஷயமா...?

வத்சலாவா? வா! வா! இவ்வளவு நேரம் எங்களைக் காக்க வைத்ததற்காக, உனக்குச்சரியான பூஜை கொடுக்கவேண்டும் என்பதைத்தான், நானும் பொன்னியும் பேசிக்கொண்டிருந்தோம்.

மன்னிச்சிடு; பொன்னி! ஒரு நாளும் இல்லாத திருநாளா, அவர் என்னை, அழைச்சிண்டு போனர், சங்கராச்சாரியாரைத் தெரிசிக்க...?

அப்படிச்சொல்லு! என்ன, வத்சலா முகத்திலே குங்குமம் இவ்வளவு இருக்கேன்னு, யோசித்தேன். இப்ப அல்லவா தெரியுது; பிரசாதம்னு...

ஏண்டி பொன்னி! எதற்கும், குறும்புத்தனம்தானா? சங்கராச்சாரியாரைத் தெரிசிக்கணும்னு, கினைச்சிண்டிருந்தேன். பலதடவை அவரிடம் கேட்டுமிருக்கிறேன். 'உம்'னு சொன்னுத்தானே. சரி, நாம கொடுத்துவைத்தது அவ்வளவுதான்னு எண்ணிண்டேன். ஆனா, அதிசயம் தெரியுமோ, திடீர்னு, அவரே, வர்ரயா சங்கராச்சாரியாரைச் சேவிச்சூட்டு வருவோம்னு, சொன்னர். எனக்குத் தூக்கிவாரிப் போட்டுதுன்னுதான் சொல்லணும்.

அவர் மனதிலே, அந்த எண்ணம் தோன்ற என்ன காரணமோ?

எனக்குத் தெரியுமே அந்தக் காரணம்!

அது எப்படி! பொன்னி! உனக்குத் தெரியும், காரணம்?

கொஞ்சம்புத்தி இருப்பதாலே... சேச்சே! அப்படிச் சொல்லக் கூடாது. இருக்கிற புத்தியைச் சரியாகப் பயன்படுத்துவதாலே...

வக்கணை பேசினது போதும்... காரணம் என்ன, அதைச்சொல்லு கேட்போம்.

நேற்று, மந்திரி சுப்ரமணியம், தன் துணைவியாரை அழைத்துக் கொண்டுபோய், சங்கராச்சாரியாரைப் பார்த்துவிட்டு வந்ததாகப் பேப்பர்லே, வந்தது. அதைப் பார்த்ததும், வத்சலாவின் வீட்டுக்காரருக்கு, நாமும் போய்வர வேண்டும் என்கிற எண்ணம், ஏற்பட்டுவிட்டிருக்கும்.

போடி, போக்கிரி! மந்திரிபோய் வருவதால்தானா, சங்கராச்சாரியாருக்கு மகிமை!!

ஐயோ, நான் அப்படியா சொன்னேன். மந்திரி போன்றவர்கள் போய் வருவதாலே, நாமும்போய்ப் பார்க்கலாம்னு, ஒரு எண்ணம் ஏற்பட்டிருக்கும்னுதான், சொன்னேன்......

பொன்னிக்குத்தான் இதெல்லாம் பிடிக்காதே, அதனல், கேலி பேசரு. இடக்கட்டும், அவதார புருஷா உண்டு என்பதையாவது, ஒத்துக்கொள்வயோ......? இல்லையானா, அதைக்கூட மறுத்துப் பேசுவயோ......

நான் எதற்காக மறுக்கப் போறேன், வத்சலா! அவதார புருஷர்கள், என்ன, அவதாரப் பெண்கள்கூட, உண்டு! பிறவி எடுத்த எல்லோரும், அவதாரங்கள் தானே...

பார்த்தயாடி, ஏமலதா! இவளோட விதண்டாவாதத்தை...... பொன்னி! என்னதான் கலிகாலமா இருந்தாலும், இப்பவும், மகான்கள், மகரிஷிகள், தபோதனர்கள் இல்லாமல்போகவில்லை...

ஆமாமாம்! பம்பாய் பக்கத்திலே கூட, ஒரு தபோதனர் இருக்கிறாராம்—பெரிய மகான்...பத்திரிகையிலே பார்த்தேன்.

பம்பாயிலா? பத்ரிநாத்திலா...?

பத்ரிநாத்துமல்ல, பண்டரிபுரமுமல்ல. அங்கெல்லாம், பஜனை செய்துகொண்டுதானே இருக்க வேண்டும். இந்தத் தவசிக்கு அது பிடிக்காதே...

அது யாரடி, பஜனைசெய்யாத தவசி? அப்படிப்பட்டவனுக்குத் தவசி என்று பெயர் ஒரு கேடா...

அடி அம்மா! கன்னத்திலே போட்டுக்கொள்ளு. கண் அவிந்து விடப்போகிறது. இந்தத் தவசி சாட்சாத் கிருஷ்ணபரமாத்மாவின் அவதாரமாம்...

கிருஷ்ணபரமாத்மாவின் அவதாரமா...

ஆமாம், வத்சலா! அதனலே தான், கோபிகைகளை அழைத்து வைத்துக்கொண்டு, கோலாகலமாக லீலைகளைச் செய்கிறாராம்.

என்னடி உளறிக்கொட்றே! கோபிகைகளை......

இந்தத் தவசியை, கிருஷ்ணபரமாத்மாவின் அவதாரம் என்று நம்புகிற பக்தைகள் இருக்கிறார்கள் அல்லவா, பெண்கள், அவர்கள் தங்களைக் கோபிகைகள் என்று நம்பிக்கொண்டு......

நம்பிக்கொண்டு......

கிருஷ்ணனுடன் கோபிகைகள் நடத்திய லீலை தெரியுமல்லவா...

அக்ரமமாக இருக்கே. அடுக்குமோ, இந்த அநியாயம்...

அப்படி அப்போது கேட்டார்களா, கிருஷ்ணபரமாத்மாவை?

போடி! அவர், பகவான்......

ஆமாம்...இவர், தன்னை கிருஷ்ணவதாரம் என்றுதானே சொல்லிக் கொள்கிறார்,

சொல்லிக்கொண்டா, இப்படிப்பட்ட நீசத்தனமான காரியம் நடத்த அனுமதிக்கிறதா......

கூடாது...இதை உடனே தடுத்தாக வேண்டும்......அவதாரம்

என்று சொல்லிக்கொண்டு ஆபாச நடத்தையிலே ஈடுபட்டிருக்கிற ஆசாமியைப் பிடித்து, வழக்குப்போட்டுத் தண்டித்தாக வேண்டும் என்றெல்லாம், பேப்பரிலே எழுதி இருக்கிறது......

என்னமோடி பொன்னி! இந்த மாதிரி விஷயத்தைக் கேள்விப்படுறபோது, பயமாகவே இருக்குது ......எந்தப் புத்திலே எந்தப் பாம்பு இருக்குமோன்னு......

அதனாலேதான், என்னைப் பொறுத்தவரையிலே, புத்து இருக்கிற பக்கமே, போவதில்லை. மேலும், வத்சலா! தவசி தவசி என்கிறோமே, அவர்களைப்பத்தின கதைகளைப் படித்தா, பிறகு, பயம் மட்டுமல்ல, வெறுப்பே ஏற்பட்டுவிடும், அப்படிப்பட்டவர்களிடம்.........

அந்த வெறுப்புக்காரணமாக, பக்தியே வேண்டாம் என்று இருந்துவிடலாமா.........அது நல்லதா......அந்தப் பாபம் நம்மைச் சும்மாவிடுமா.........

வத்சலா! இருக்கிற சங்கடமே' இதிலேதான். பக்தி இருக்க வேண்டுமா வேண்டாமா என்று கேட்டால், எல்லோரும் இருக்க வேண்டும் என்றுதான் சொல்லுவார்கள்......ஆனால், அந்த நம்பிக்கையைப் பயன்படுத்திக்கொண்டு, தவசி, மகரிஷி, சாது, சன்யாசி என்று கூறிக்கொண்டு, நான் சொன்னேனே கோபிகைகளுடன் கூடிக் குலாவும் கலிகால கிருஷ்ணன், பம்பாய் அவதாரம், அவன்போல அக்ரமங்களைச் செய்துவிடுகிறார்கள். கண்டித்தால், உடனே உன் போன்றவர்களுக்குக் கடும் கோபம்! ஆஹா! பக்தியே கூடாதா? அது பாபமல்லவா என்று கேட்கிறீர்கள். சங்கடமான சிக்கல் அல்லவா இது. நெருப்பு வேண்டுமா வேண்டாமா என்று கேட்டால், என்ன பதில் சொல்வது? நிச்சயமாக வேண்டும், அடுப்புக்கு! அடுப்புக்குப் பயன்படவேண்டிய நெருப்பு, வீட்டுக் கூரையைப் பிடித்துக் கொண்டால், என்ன செய்வோம்! அக்னிதேவன் திருவிளையாடல் என்று கூறுவோம்!!

பொன்னி! உன்னோடு பேசி, யாராலே ஜெயிக்க முடியும்...அடேஅப்பா! ஒரு கேள்வி கேட்டுவிட்டா, நீ, ஒன்பது கேள்வி அல்லவா, கேட்டுத் திணறடிப்பே......

நீங்களெல்லாம், திணறுவதாலே, எனக்கென்ன லாபம்; சொல்லு: ஒருவருக்கொருவர், மனம்விட்டுப் பேசினால், உண்மை துலங்குமே, என்கிற ஆசைதான்... வேறென்ன......ரஷியாவிலே, ரஸ்புடீன் என்ற பெரிய சாமியார் இருந்தானாம். அவன் பேச்சுத்தான், அந்த நாட்டையே ஆட்டிப் படைக்கும் சட்டமா இருந்ததாம்...

அது தெரியும்டி பொன்னி! பெரிய அக்ரமக்காரனும்......

யார்? ரஸ்புடீன்தானே! ஆனால், எவ்வளவு இலட்ச இலட்சமாக மக்கள், அவனைக் கடவுள் அனுப்பிய தூதர் என்று நம்பிக்கொண்டிருந்தார்கள் தெரியுமா......... புரட்டு வெளிப்படுகிற வரையில்...

பொன்னி! ரஷியாவிலே குதிரைப் பால் சாப்பிடுகிறார்களாமே, தெரியுமா?

ஆமாம், நம்ம மந்திரி பக்தவத்சலம் சொல்லி இருப்பதாகப் பேப்பரில் பார்த்தேன்!

இவருக்கே கொடுத்தார்களாம். குதிரைப் பால்.

ஆனா, அவர் சாப்பிடமாட்டேன்னு சொல்லிவிட்டார்.........

ஆமாம், அதையும் அவர் பேசி இருக்கிறார்......

அதென்னடி பொன்னி! அவ்வளவு பெரிய அறிவாளிகளெல்லாம் இருக்கிற நாடு, ரஷியா என்று சொல்கிறே, அங்கே, குதிரைப் பாலைக் குடிக்கிறாளாமே...... அநாகரீகமா இல்லையோ...

ரஷியாவிலே, எல்லோரும் குதிரைப் பால் குடிக்கிறார்களோ இல்லையோ, எனக்குத் தெரியாது...... ஆனா, நம்ம நாட்டிலே, ஒரு பழக்கம் உண்டு. சில குழந்தைகளுக்கு, வியாதி வராமலிருக்க, கழுதைப் பாலைக் கொடுப்பார்களாம்......... முன்பு.........

செச்சே! இருக்காது......

பாட்டிமார்களைக் கேட்டுப்பார், சொல்லுவாங்க. கழுதைப் பால், முதலை இறைச்சி, இதெல்லாம், நோய்போக்க மருந்தாக உபயோகப்பட்டிருக்கிறது, நம்ம நாட்டிலே. ஆனா, இதை எந்த ரஷிய மந்திரியும், கண்டுபிடிக்கல்லே. கண்டுபிடிச்சா, இந்தியாவிலே, கழுதைப் பாலைக் குடிக்கிறார்கள் என்று பேசித் தொலைப்பான். எங்கள் நாட்டிலாவது குதிரைப் பாலைக் குடிக்கிறோம், அங்கு கேவலம் கழுதைப் பாலைத் தருகிறார்களே, குழந்தைகளுக்கு, என்று கேலி செய்திருப்பான்.

போதும்டி பொன்னி! கழுதை குதிரைபத்தின பேச்சு. கதையைச் சொல்லு. முத்தழகி என்பவ, யார்?

கழுதையைப்பத்திப் பேசின போதே, எனக்கு முத்தழகி கவனம் தான் வந்தது. முத்தழகி, தன் அழகை அதிகப்படுத்திக்கொள்ள, ஒவ்வொரு நாளும் கழுதைப் பாலில் குளிப்பாளாம்.

கழுதைப் பாலிலே குளிப்பதா?

ஆமாம்......நமது நாட்களிலே' அழகுக்காக ஏதேதோ செய்து கொள்கிறோமல்லவா, அந்த நாட்களிலே, ரோம் நாட்டிலே, பெண்கள், தங்கள் அழகை அதிகப்படுத்திக்கொள்ள, கழுதைப் பாலிலே, குளிப்பார்களாம்.........

பொன்னி! நீ, சொல்லிக்கொண்டு வருகிற கதை, கிரேக்க நாட்டுக் கதை அல்லவா?

ஆமாம்......ஆனால் முத்தழகியின் அப்பா முந்திரிக் காட்டான், 'பூஜாரி' ஆவதற்கு முன்பு, பல நாடுகள் சுற்றியவன், ஆங்காங்கு கண்டவற்றைத் தன் மகளிடம் கூறுவான்...அதனால், கழுதைப் பாலில் குளிப்பது நல்லது என்று முத்தழகி தெரிந்துகொண்டாள்.

அதென்னடி பெயர், முந்திரிக் காட்டான்!

ஏன்! விசித்திரமாக இருக்கிறதா? நான்தான், முதலிலேயே சொன்னேனே, கிரேக்கப் பெயர் சொன்னால் குழப்பமாக இருக்கும், அதனால், தமிழ்ப்பெயராகவே சொல்லுகிறேன் என்று. முந்திரிக்காட்டான் ஒரு காலத்தில், பெரிய முரடனாக இருந்தவன். குடி கூத்தி, அடிதடி, அமளி, இப்படிப்பட்ட கெட்ட நடத்தைக்காரன்...

அப்படிப்பட்ட ஆக்ரமக்காரனா, ஆலயத்துக்குப் பூஜாரியானான்?

ஏண்டி, ஏமலதா! அக்ரமம் செய்திருப்பான் ஒரு காலத்திலே, பிறகு, பகவத் கடாட்சத்தாலே, ஞானம் பெற்று, நல்லவனாகி இருப்பான்; நம்ம திருமங்கை ஆழ்வார் தெரியாதோ உனக்கு. ஏண்டி, பொன்னி! அப்படித்தானே.

திருமங்கைஆழ்வார் எப்படியோ எனக்குத் தெரியாது வத்சலா!

இந்த முந்திரிக்காட்டான் பெரிய நெஞ்சழுத்தக்காரன். பூஜாரி ஆவதற்கு முன்பு, பல கொடிய காரியங்களைச் செய்ததற்காக, வருத்தப்படவுமில்லை, மன்னிப்புக் கேட்கவுமில்லை; மார்தட்டிக்கொண்டுசொன்ஞன், ஆமாம்! அப்படி எல்லாம் தான் செய்தேன்! நான் செய்யாத பாபம் இல்லை. கற்பழித்தேன்—கழுத்தை நெறித்தேன்—கொள்ளை அடித்தேன்! ஏன்? எல்லாம், ஆண்டவன், செயல்! அவர்தான்; என்னை அவ்வளவு பாவங்களிலும் தள்ளிவிட்டு வேடிக்கைபார்த்தார்! இரும்பை நெருப்பிலே போட்டு பழுக்கக் காய்ச்சி, சம்மட்டியாலே அடிஅடி என்று அடித்துஅடித்து வாளாக, வேலாக, சூலமாக, உலைக்கூடத்தான் செய்கிருனல்லவா, அதுபோல, ஆண்டவன் என்னைப் பாபம் நிரம்பிய படுகுழித் தீயிலே தள்ளி, பழுக்கக் காய்ச்சி, பிறகு, என்னைத் தன் மகிமையை உலகுக்குஅறிவிக்கத்தக்க தூதன் ஆக்கிவிட்டிருக்கிருர். எல்லா அக்ரமங்களையும் நானே செய்து பழக்கப்பட்டிருப்பதால், பாபியைக் கண்டுபிடித்துவிட முடியும்—அவனுடைய பார்வையிலிருந்தே! இவன் கொள்ளை அடிப்பான் என்பதை, அவன் கொள்ளை அடிப்பதற்கு முன்பே, கண்டுபிடித்துவிட என்ஞல் முடியும்! ஏன் என்ருல், நான் கொள்ளையடித்திருக்கிறேன்-கொள்ளை அடிக்கவேண்டும் என்று திட்டமிடும்போதே, அந்த எண்ணம் கண்வழியாகக் கிளம்பும்! அதஞல், ஒருவனுடைய கண்களைப் பார்க்கும்போதே, இவன் கொள்ளைக்காரன் ஆகிவிடுவான் என்பதை என்ஞல் கண்டுபிடித்துவிடமுடியும். இந்தக் கன்னி, கட்டித் தங்கம் — இவளைக் கெட்ட நினைப்புத் தீண்டவே முடியாது—களங்கம் இல்லாத முகம்!—என்றெல்லாம், மற்றவர்கள் நம்பிவிடுவார்கள்—எனக்குத் தெரியும், ஒரு பெண்ணைப் பார்த்ததும், இவள் எப்போது கெட்டுவிடுவாள், எப்படிக் கெட்டுவிடுவாள், என்பதெல்லாம். நான்; எல்லாப் பாப காரியத்தையும் செய்து செய்து பழக்கப்பட்டு இருப்பதால், பாபம், எங்கெங்கு குடிஇருக்கும் என்பதை என்ஞல் மட்டுமே கண்டுபிடிக்க முடியும். அதஞல்தான், என்னைத் தேவாலய பூஜாரியாக நியமித்தால், நான், திரு அருள் எல்லோருக்கும் கிடைக்க ஏற்பாடு செய்வேன். என் பார்வையிலிருந்து எந்தப்பாபியும் தப்பித்துக்கொள்ள முடியாது!—என்றெல்லாம் பேசினுன்.

இவன் பலே ஆசாமியடி, பொன்னி! இவன் பேச்சை, நம்பினூர்களா...?

நம்பாமல்? அவன், அவனுகவா பேசிஞன்! ஆவேசமாடி அல்லவா பேசிஞன்.

அப்படியா விஷயம். ஆவேசம் ஆடிஞஞ?

ஆமாம்! இலுப்பைத்தோப்பிலே தூக்குப்போட்டுக்கொண்டு செத்த வயிற்றுவலிக்காரன்தான் நான். இந்தப் பெண்ணை நான்பிடித்து இன்றோடு ஆறு வருஷமாகிறது, என்று பேயாடிக்கொண்டு, சில பெண்கள் பேசுவதில்லையா, நமது நாட்டில், இப்போதுகூட......அதுபோலத்தான் முந்திரிக்காட்டான்! ஆவேசம் ஆடிஞன்! இப்படி எல்லாம் பேசிஞன்! பிறகு, கீழேவிழுந்தான் — கொஞ்சநேரம் கழித்து எழுந்தான்—என்ன நடந்தது, என்ன நடந்தது என்று கேட்டான். இப்படி இப்படி நடந்தது என்று சொல்லிவிட்டு, இன்று முதல் உன்னைக் கோயில் பூஜாரியாக நியமிக்கப் போகிறோம் என்ருர்கள் பக்தர்கள். நாஞ? என்று அவன் தயக்கப்பட்டுப் பேசிஞன். நீயேதான்! வேறுயாருக்கும் அந்த யோக்யதை இல்லை. பேகஸ்தேவன் கோயிலுக்கு நீதான், இன்றுமுதல் பூஜாரி என்ருர்கள். முந்திரிக்காட்டான் பேகஸ்தேவன் கோயிலுக்குப் பூஜாரியாஞன்...

பேகஸ்தேவன், யார்? யாரோ கழுதைமீது சவாரிசெய்பவன் என்ருயே, அவஞ?

அவன் அல்ல. அது பேகஸ் தேவனுக்கு நண்பன். பேகஸ், புலி பூட்டப்பட்ட தேரிலே செல்பவன்.

குடிகாரக் கடவுள் என்று சொன்ஞயே, அவன்தானே! பொன்னி! அவன்தானடி, ஏற்றவன்......

எதற்கு ஏற்றவன்?

இப்போது, நமது நாட்டிலே சில பேர், கள்ளுக்கடைகளைத் திறக்க வேண்டும் என்பதற்காகக் கிளர்ச்சி செய்கிருர்களாமே, அவர்களுக்கு 'இஷ்டதேவதை'யாக இருக்க, இந்த பேகஸ்தான் சரியான ஆள்...

பரவாயில்லையே, வத்சலா, நகைச்சுவையோடு பேசக்கற்றுக்கொண்டாயே. எல்லாம்பொன்னி! உன்னோடு பழகிப்பழகிக் கற்றுக்கொண்ட வித்தைதான்...

பழகிஞல் மட்டும், கற்றுக்கொள்ள முடியுமா? நானும், எத்தனையோ வருஷங்களாக, உன்னோடு பழகிக்கொண்டுதான் இருக்கிறேன், இன்னமும் எனக்கு வரவில்லையே, உன்னோட பச்சைச் சிரிப்பு...

நல்லாச் சொன்ஞயடி பொன்னி! உண்மையான பேச்சு! ஏமலதாவோட பச்சைச் சிரிப்பு இருக்கு பாரு! வேறு ஒருவருக்கு வராது. அவ, கலகலன்னு சிரிச்சி, நீ, எப்பவாவது பார்த்திருக்கறியோ...

கதையைச் சொல்லுடி, பச்சைச் சிரிப்பும் ஊதாச்சிரிப்பும்!

பூஜாரிவேலை கிடைத்தது முந்திரிக்காட்டானுக்கு.

பொன்னி! பூஜாரி ஆனபிறகாவது, அவன் தன்னுடைய சேஷ்டைகளை நிறுத்திக்கொண்டானே?


# ஆங்கிலம்

தமிழ் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களுக்கு உலகமொழியான ஆங்கிலத்தைக் குறைந்த செலவில் தபால்மூலம் உத்தரவாதத்துடன் கற்றுக் கொடுக்கப்படும்.

உடனே எழுதுங்கள். :: விவரங்கள் இலவசம்.

இந்தியன் இங்லிஷ் இன்ஸ்டிட்யூட்,
காந்திபுரம், கோயமுத்தூர்-12.

எப்படி வத்சலா! முடியும். சேஷ்டைகளை நிறுத்திக்கொண்டால், முத்தழகி ஏது?

அடப்பாவி! பூஜாரி ஆனபிறகா முத்தழகி பிறந்தா?

ஆமாம்...தேவாலயத்திலே, பல கன்னிப் பெண்கள் பணிவிடை செய்வது, இரேக்கநாட்டுப் பழக்கம். அவர்கள், கடவுளின் கடாட்சம் பெற்றவர்கள் என்பது, நம்பிக்கை. மலர் பறிப்பது, மாலை தொடுப்பது, கோயிலைக் கூட்டுவது விளக்கு ஏற்றுவது, பக்தர்களுக்குப் பணிவிடை செய்வது; இது அவர்கள் வேலை. பெரிய குடும்பத்துப் பெண்களெல்லாம்கூடக் 'கோயில் கன்னி' ஆகிவிடுவதுண்டு. அப்படிப்பட்ட ஒரு கோயில் கன்னி, பாப நெருப்பையே நீந்திக் கடவுளைக் கண்டறிந்த பூஜாரியிடம், 'உபதேசம்' பெற்றுக் கொள்ள நினைத்தாள். பக்குவமான பருவம் தான்—அருள் பெறுவதற்கு ஏற்ற பாத்திரம்தான்—என்று முந்திரிக் காட்டான், கூறினான். காரிருளில் நட! கடவுளை நினைத்தபடி! காலம் பிறக்கும், அவன் கருணை கிடைக்கும், என்று கூறினான்.

ஏன், அப்படிச் சொன்னான், அதனுடைய அர்த்தம் என்ன?

அதனுடைய அர்த்தமா? பைத்யக்காரி! அந்தப் பெண்ணை, நம்ப வைக்க அதுபோலப் பேசினான். என் உயிரையே நான் பலியிடச் சித்தமாக இருக்கிறேன், என்றாள் அந்தப் பெண்—

அவளுடைய பெயர் என்ன?

ஏமாளி என்று வைத்துக் கொள்ளேன். பெயரில் என்ன இருக்கிறது. நடந்ததைக் கேளேன். அவன் சொன்னபடியே, காரிருளில் அந்தக் கன்னி நடந்தாள், கடவுளின் அருளை நாடி. தொலைவிலிருந்து, அதைப் பார்த்துப் பார்த்து, முந்திரிக் காட்டான் பூரித்துக் கிடந்தான்.

கெடுத்துவிட்டான் என்று சொல்......

முத்தழகி பிறந்தாள்—பேரழகுடன் இருந்த குழந்தையை எடுத்து வந்து, பூஜாரியிடம், கொடுத்தாள்......

சரி! நம்ம விசுவாமித்திரர் கதை தான்! குழந்தையைத் தொடமாட்டேன் என்று கூறிவிட்டிருப்பான், பாவி.

இல்லை வத்சலா! இவன் அப்படிச் செய்யவில்லை. குழந்தையை வாங்கிக் கொஞ்சினான், முத்தமிட்டான்,......என் தவம் பலித்தது என்றான். கடவுளின் கருணையே, இந்தக் குழந்தையாக வடிவம் எடுத்தது என்றான்.

தாய், ரொம்பச் சந்தோஷப்பட்டிருப்பாள்.

இருக்குமல்லவா? நீ சொன்ன, நம் நாட்டு விசுவாமித்திரர்போல இல்லையே, குழந்தையை உயிர் என்று அல்லவா சொல்லுகிறான். அதைக் கேட்டு, அவள் ஆனந்தப் படத்தானே தோன்றும்.

பொன்னி! ஒன்றுகேட்க மறந்தே விட்டேனே. பூஜாரியின் தொடர்பால், இந்தக் கன்னிப்பெண்ணுக்குக் குழந்தை பிறந்ததைக் கண்ட கோயிலில் இருந்த மற்றவர்கள், பதறவில்லையா?

கண்டால்தானே பதறுவார்கள். அவன்தான், அவளைக் காரிருளில் நடக்கச் சொன்னானே. அப்படி நடந்து நடந்து, இவனிடம் சிக்கி விட்டாள். பிறகு, கோயில் ஆட்களுக்குத் தெரியாமல், அவளை, ஒரு இடத்தில் அழைத்துச்சென்றான்; சிறைப்படுத்தினான். அவள் அதை அறியவில்லை.

அப்படிச் சொல்லு! அதனால் தான், அக்ரமம் வெளியே தெரியவில்லை. சொல்லு, குழந்தை பிறந்தது... பிறகு...

குழந்தைக்குத் தங்கத்தால் தொட்டில்! தாலாட்டுப்பாட, பத்து தாதிமார்கள்!

அடே! அப்பா! அவ்வளவு அமர்க்களமான செலவா, பூஜாரிக்கு!

பைத்யக்காரி! அவன் ஏன் செலவு செய்கிறான். முத்தழகியைத் தத்து எடுத்துக்கொண்ட சீரப்பன் செய்தான்.

அதென்னடி பொன்னி! கதை புது தினுசாக மாறுது...

குழந்தையைத் தாயிடமிருந்து பிரித்து, நெடுநாளாகக் குழந்தை இல்லையே என்று ஏங்கிக்கொண்டிருந்த சீமான், சீரப்பன் என்பவனுக்கு, இது கடவுளின் அருள் என்று கூறி, மயக்கி, நம்பவைத்து 'தத்து' எடுத்துக்கொள்ளச் செய்தான். முத்தழகி மாளிகை சென்றாள்.

அவளைப் பெற்றவள் என்ன ஆனாள்? எப்படிச் சம்மதித்தாள், குழந்தையை விட்டுப்பிரிய...?

அவளுக்கு, என்ன நடந்தது, என்ன நடக்கிறது என்பது தெரிந்தால்தானே. பூஜாரி கொடுத்த ஏதோ ஒரு பானத்தைச் சாப்பிட்டாள், அவ்வளவுதான், அவளுக்கு புத்தித் தடுமாற்றம் ஏற்பட்டுவிட்டது. ஒரே மிரட்சி! திடீர் திடீரென்று கூவுவாள்! எங்கே என் செல்வம்! என் முத்து எங்கே! மாணிக்கம் எங்கே! என்று கூச்சலிடுவாள்.

ஐயோ, பாவம். அவளுடைய மனம் அப்படிக் குழம்பிவிட்டது...

பக்தகோடிகளே! இந்தப் பெண், பாபியாகிவிட்டாள். தேவன் திருக்கோயிலிலே உலாவிக்கொண்டே, கேவலம், முத்து, மாணிக்கம், வைரம், வைடூரியம் என்று கூறப்படும் செல்வத்தின்மீது பாசம் கொண்டுவிட்டாள். இனி இங்கு இருக்கக்கூடாது என்று கூறி, விரட்டிவிட்டான்.

கொலைபாதகனாக இருக்கிறானே.

கோயில் பூஜாரியாக இருக்கிறான்!! யார் என்ன கேட்கமுடியும்? போச்சி! போச்சி! என் கற்பு போச்சி! கட்டித் தங்கம் போச்சி! என் இன்பம் போச்சி! என் முத்து போச்சி!—என்று கூக்குரலிட்டபடி அந்தப் பெண் அலைந்துகொண்டிருந்தாள்... இரு! இரு!... வத்சலா உங்க வீட்டுக்காரர் குரல்போல இருக்கிறதே...

ஆமாம்...... என்ன இவ்வளவு கூச்சல்...

என்னமோ, போச்சு! போச்சு! என்று கூவுகிறாரே.

அதோ அவரே வந்துவிட்டார். என்னடி வத்சலா! இவ்வளவு கோபமாக, பேப்பரைத் தூக்கி எறிகிறாரே...

எடுத்துத்தான் பாரேன்...பேப்பரை! இதை ஏன், வத்சலா முகத்திலே வீசி எறிகிறார்...

ஐயயோ! பொன்னி! போச்சிடி! போச்சி! என் வயித்திலே, நெருப்பல்லவோடி விழுந்துடுத்து. நகை நட்டுகூடச் செய்யாம, நாலு ஆயிரம் ரூபாய் சேர்த்து, போட்டுவைத்தேண்டி, பாலை பாங்கிலே........ பாங்க் முழுகிவிட்டதாமேடி...... நாலு ஆயிரம் போச்சிடி......நாலு ஆயிரம்......என்னங்க...உங்களைத்தான்...பொன்னி! நான் உள்ளே போகணும் அவரிடம் விவரம் கேட்க. நாலு ஆயிரம் போச்சி, நாலுஆயிரம்...போயிட்டுவர்ரேன் பொன்னி! ★

காஞ்சீபுரம்

4-9-60.

தம்பி!

கூவம் நதிக்கு அணைகட்டச் சொல்கிறார்களா, தி. மு. கழகத்தினர் என்று கோபாவேசமாகப் பேசி வருகிறார், கோலோச்சும் நிலை கிடைக்கப்பெற்றதால் ஏத தகைய வாய்வீச்சும் மதிப்புப் பெற்றுவிடும் என்று எண்ணிக்கொள்ளும ஏமாளித்தனத்தில் தன்னை மிஞ்சுவார் இல்லை என்று காட்டிக்கொண்டுலவும் கனம். சுப்பிரமணியம்.

என்னுடைய அறிவாற்றல் எத்தகையது, ஆராய்ச்சித்திறன் எத்தன்மையது, வீரதீரம் எத்துணை பெரிது, ஏதுமறியாதார்களே! எதையோ கதைத்துக்கொண்டு இடப்போரே! பிழைக்கும் வழி அறியாப் பேதைகாள்! என்னைப்போய், கூவம் ஆற்றுக்கா அணைகட்டச் சொல்கிறீர்கள், என்று கேட்கக் கிளம்புகிறார். தம்பி! இவரை ஒருவரும் இந்தக் காரியம் செய்யச் சொல்லவில்லை. எனினும், வடக்கே பெரிய பெரிய அணைகள் கட்டப்பட்டுள்ளனவே, இங்கு என்ன சாதித்தீர்கள்? என்று நாம் கேட்கிறோமல்லவா, அதைத் திரித்துக்கூறி ஆறு இருந்தாலும், இல்லை எனினும், அணைகட்டுக! என்று அறியாமை காரணமாக நாம் கூறுவது போலவும், நம்மை இடித்துக்காட்டித் திருத்தும் திருத்தொண்டினைச் செய்து தீரவேண்டிய பெரும் பொறுப்பினை இவர் தாங்கித் தவித்துக்கிடப்பது போலவும், கருவில் உள்ளது வெளியே வந்து வீழ்ந்தாலொழியச், சூல்கொண்ட மாது நிம்மதி பெற முடியாது என்பதுபோல, உள்ளத்திலே குடிபுகுந்துவிட்ட பேரறிவினை இவர் வெளியே உமிழாவிட்டால், பாரம் தாங்கமாட்டாமல் தத்தளிக்க நேரிடும் என்பது போலவும், எண்ணிக்கொண்டு, கூவம் ஆற்றுக்கா அணைகட்டச் சொல்கிறார்கள்!!— என்று கேலிபேசிப் பார்க்கிறார்.

ஏ! எனை நன்கு அறியாத மக்காள்! அணைகட்டுவது மிகப்பெரிய சாதனையோ! அந்த நாளில் குரங்குகள் அல்லவா, சேதுவுக்கு அணைகட்டி முடித்தன, என்று இராமாயணம் கூறுகிறது. அங்ஙனமிருக்க, அமைச்சராக இருக்கிறேன், நாடு மண்டியிட்டுக் கேட்டுக்கொண்டதால், பல துறைகளையும் ஒருசேரப் பார்த்துக்கொண்டு வருகிறேன், அப்படிப்பட்ட என்னைப்போய், கேவலம் குரங்குகள் செய்துமுடித்த வேலையையா செய்யச் சொல்கிறீர்கள்! எத்துணை இறுமாப்பு உமக்கு!! இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் இடையே கடல் இருக்கிறது; எனினும் ஓர் பாதாள வழி அமைக்கலாமா என்றோர் பிரச்சினை இருக்கிறது, இலண்டன் செல்கிறீராமே, பிழைத்துப் போகட்டும் அந்த நாட்டு மக்கள், பிரச்சினைக்கு ஒரு விளக்கம், வழிவகை கூறிவிட்டு வருக! என்று கூறியிருந்தால், செய்துமுடிப்போம்! என்றுஎண்ணி மகிழ்ந்திருப்பேன்.

# மற்றொரு கூவம்!

கூடிக்கூடிப் பேசுகிறார்கள் போரை ஒழிப்பது எங்ஙனமென்று, அதற்கான வழி தெரியாது வதைபடுகின்றனர்; அமைச்சர் ஏறே! இலண்டன் சென்றதும், காரிருளில்சிக்கித் தவித்திடும்'இராஜதந்திரிகளை' வரச் சொல்லி, அறிவுரை அருளி, உலகம் உய்ய வழி கூறி விட்டு வாரும், என்று கூறினால், மகிழ்ச்சியுடன் அந்தப் பணியினை ஏற்றுக்கொண்டிருந்திருப்பேன்!! சமதர்மம் என்பதுபற்றி எவரெவரோ ஏதேதோ எழுதிக் குழப்பிவிட்டிருக்கிறார்கள், அதனால், சமதர்மம் எனும் தத்துவத்துக்கு ஒரு தெளிவுரை நூல் தீட்டி, அதனை உலக மொழிகள் அனைத்திலும் வெளியிட, தங்களைக் கண்டதும், துடிதுடித்தோடி வந்து, பதிப்பாளர்கள், குழுமி நிற்பர், கொங்குநாட்டுத் தங்கமே! அத்தகைய ஒரு நல்லேடு எழுதித்தந்து, மார்க்சையும், ஏன்ஜல்சையும் ப்ரோதானேயும் பிறரையும், நம்பி நாசமாகிவிட்ட; நானிலத்துக்கு, ஒரு புதுவழி காட்டி விட்டு வாருங்கள், என்று கூறினால், சில மணிநேரம் அதற்கென ஒதுக்கி, அந்தக் காரியத்தைச் செய்து முடித்துத் திருப்தி அடைவேன் — தமிழகத்துக்குப் பெருமை ஏற்படச் செய்திடுவேன்!! இப்படிப்பட்ட பணிகளைக் கூறாமல், செச்சே! குரங்குகள் செய்து முடித்த காரியம், அணைகட்டுவது, அதைச் செய்யச் சொல்கிறீர்களே; என்னே; — என்று, அமைச்சர் ஆயாசப்படுகிறார்போல் தெரிகிறது, அவர் பேசும் போக்கினைக் கவனிக்கும்போது.

அமைச்சராக இருப்பவருக்குத் தமது அறிவாற்றலிலே, நம்பிக்கை இருக்கத்தான்வேண்டும்—அளவு அறிந்து நம்பிக்கை இருந்தால் நல்லது—வரைமுறையற்ற நம்பிக்கைகொள்வது, கேலிக்குரியது; எனினும், இருந்துவிட்டுப்போகட்டும்; ஆனால், அத்துடன், பிறர் பேசுவது அத்தனையும் பேதைமை, என்று எண்ணிக்கொள்வது ஆணவத்தின் விளைவு; அதனை எடுத்துப் பேசுவது, நோய் முற்றுகிறது என்பதற்கு அடையாளம்.

யார், எங்கே, எப்போது, இந்த உலகமகா மேதையைப்பார்த்து, ஆறுகள் இல்லை எனினும், அணைகள் கட்டவேண்டும் என்று கேட்டார்கள்!

அன்றும் கேட்டோம், இன்றும் கேட்கிறோம், கோடி கோடியாகக் கொட்டி மலைமலையாக அணைகள் கட்டி, வடக்கே பாலைவனத்தைச் சோலைவனமாக்குகிறீர்களே, தெற்குச் சீமைக்குச் செய்தது என்ன? என்று கேட்கிறோம்; உரிமை இருப்பதால், தேவை அறிவதால், ஆட்சியாளர் திருவடி தாங்கிடுவோராகிப்போனதை உணருவதால்.

இதைத் திரித்துக்கூறி, அணையா? எங்கே? கூவம் ஆற்றிலே கட்டவா? என்று கேட்பவர், அமைச்சராகமட்டும் இல்லாதுபோனால், யார் இந்தக் குறும்புப் பேச்சுப் பேசுபவர்? கோமாளியோ!! என்றுதான் நாடு கேட்டிருக்கும். பேசுபவர் அமைச்சர் என்று அறிவதால், நாடு, திகைத்துக்கிடக்கிறது, அமைச்சரா இப்படிப்பேசுகிறார் என்று எண்ணி அல்ல; இப்படிப்பேசுபவரா, அமைச்சராக இருக்கிறார் என்று எண்ணி.

கூவத்துக்கு அணைகட்டச் சொல்லியோ, கோவளத்திலே கோட்டைகட்டச்சொல்லியோ, நாம் யாரும், கேட்டோமில்லை; கேட்டதெல்லாம், வடக்கு வளம் பெற என்னென்ன செய்யவேண்டும் என்று திட்டமிட்டு, பெரும்பொருள்கொட்டி ஆர்வம் பொங்கிடும் நிலையில், காரியங்களைத் தொடர்ந்து செய்துகொண்டு வருகிறீர்களோ, அந்த ஆர்வம், அக்கரை, திறமை, ஏனய்யா, உமக்கு இல்லை? வளமளிக்கும் திட்டங்கள், தென்னகத்துக்கு எம்முறையில் இருத்தல்வேண்டும் என்பதுபற்றி ஆர்வம்காட்டி, அதற்கான பொருள் ஈட்டுவதிலே அக்கரை செலுத்தித், திட்டங்களை நிறைவேற்றுவதிலே அவசரத்தைக்காட்டி, ஏன் வெற்றிப்பட்டியலை நீட்டாதிருக்கிறீர்கள், என்று, கேட்கிறோம். தவறு? இதற்குப்பதில், உதட்டைப் பிதுக்குவதும், உறுமிக்காட்டுவதும்தானா! வேறு இல்லையா!!

தம்பி! அமைச்சர் கூவத்துக்கு அணைகட்ட வேண்டாம்—அதன் நாற்றத்தையாவது போக்கட்டுமே பார்ப்போம். பார்த்தோமே பொறுத்திருந்து இந்தப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு மேலாக. கூவம் நதியின் நாற்றத்தைப் போக்கக்கூட வக்கு அற்று வழி அற்றுப்போயிருக்கும் இந்த வல்லமைசாலிதான், வாய்வீச்சிலே எனக்குள்ள வல்லமையைப் பாரீர் என்கிறார். இது வல்லமைகூட அல்ல! இடத்தின் காரணமாகக் கிடைக்கும், வாய்ப்பு!! யாரறியார், இதனை. அவரே; ஒருகணம், நிதானமாக எண்ணிப் பார்த்தால், புரியும்.

கூவம் ஆற்றினை பயனுள்ளதாக்கத் திட்டம்கூட இருக்கிறது—அறிந்தோர் தீட்டி, ஆளவந்தார்களால் நிறைவேற்றப்படாமல், ஏட்டளவில் இருந்துவரும், திட்டம். செய்து முடித்தாரா, செருமுனையில் எனக்கெதிர் நிற்பவன் யார்? என்று செருக்குடன் பேசி வரும், அமைச்சர் பெருந்தகை.

ஆறுகள் உள்ள இடத்தில் அணைகள்—ஏரிகள் உள்ள இடத்தில் கரைகள்!

கங்கைக்கும் யமுனைக்கும் கோடி கோடியாகப் பணம்! இங்கு காட்டாறுகளைக் கட்டுப்படுத்த, தொகையின் அளவு ஏன் அதிகப்படுத்தக்கூடாது.

தம்பி! தமிழரின் பிணங்கள், கடலலையால் மோதப்பட்டு மோதப்பட்டு, சிங்களத் தீவின் கரையிலே ஒதுக்கப்பட்டிருக்கின்றன-ஆமடா, தம்பி! ஆம்! எந்தச் சிங்களம், சீறிப் போரிட்ட தமிழர்கள் முன் ஒரு காலத்தில் மண்டியிட்டதோ, எந்தச் சிங்களவர், போரில் தோற்றதால், அக்கால முறைப்படி அடிமைகளாக்கப்பட்டு; இங்கு கொண்டு வரப்பட்டு, காவிரிக்

குக் கரை அமைக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டார்களோ, அந்தச் சிங்களவர் காண, தமிழரின் பிணங்கள், சுறா தின்றது போக, சுழல் அரித்தது போக, மிச்சம் இருந்த பிணங்கள், சிங்களத் தீவின் கரை ஓரம் கிடந்தன!!

தமிழரின் பிணங்கள் சிங்களத் தீவின் கரையிலே கிடக்கின்றன!

கொங்கு நாட்டுக் குடிமகன், தேம்ஸ் நதிக்கரை மீது எழுப்பப்பட்டுள்ள எழிலூர் சென்று, எமது காங்கிரஸ் ஆட்சியில், மக்கள் புது வாழ்வு, முழு வாழ்வு, பெற்று மகிழ்ந்திருக்கிறார்கள் என்று கூறப் போகிறார்!!

அமைச்சர் அல்லவா, ஆட்சியினால் ஏற்பட்டுள்ள அகமகிழ்ச்சிபற்றி ஆங்கிலர் அறிந்திட எடுத்துரைக்கப் போகிறார். எத்தனை எத்தனை அரசியல் தலைவர்கள், பொருளாதார நிபுணர்கள், பெரும் பேராசிரியர்கள், மதத்தலைவர்கள், கலைஞர்கள், நமது அமைச்சர் பெருமானை, அச்சமும் அடக்கமும் கொண்ட நிலையில், அனுபவபாடம் கேட்கப்போகிறார்களோ, நமக்கென்ன தெரியும், தம்பி. தெரியாமலா, செல்வார்!!

ஆனால் அங்கு சென்றும், நமது நினைவால் தாக்கப்பட்டு, கூவம் நதிக்கா அணைகட்டுவது என்று கேட்டுவிடக்கூடாது; ஏனெனில், அணை இருக்கட்டும், கூவம் நதியின் நாற்றம் போய்விட்டதா என்று அறிந்தோர், கேட்பர்.

தொழில்வளம் காண்பதற்காக, இயற்கை வளத்தைச் சரியான முறையிலே பயன்படுத்துவதற்கான திட்டங்கள் தீட்டுவதிலே, தென்னகம் புறக்கணிக்கப் பட்டிருக்கிறது என்பதை எடுத்துக்காட்டி, இடித்துரைக்காத, நிபுணர் இல்லை என்னலாம். இந்த அமைச்சரேகூட, கனரகத் தொழிலைப் பொறுத்த வரையில் தென்னகம்—அதிலும் குறிப்பாகச் சென்னை—சரியான அளவிலும் முறையிலும் வளர்ச்சி அடையவில்லை என்பதைச், சில வேளைகளில் எடுத்துக்காட்டிப் பேசியுமிருக்கிறார். மற்றவர்களுக்கு மட்டுந்தானா, எமக்கும் தெரியும், என்று உரிமையுடன் பேசித் தென்னகத்தின் தொழில் வளர்ச்சிக்கான வழிவகை நிச்சயமாகக் காண்பேன் என்று வாக்களித்துமிருக்கிறார். எனினும் இவரே, நாம் அதை எடுத்துக் காட்டும்போது, எரிச்சலடைந்து, கூவத்துக்கு அணை கட்டவா என்று கொதித்துக் கேட்கிறார். கொஞ்சம் உரத்த குரலில் பேசுங்கள்—என்று கூறுபவரைப் பார்த்து, காது செவிடா? என்று கேட்டுவிடுங்கள்—எவ்வளவு கோபம் வருகிறது என்பது தெரியும். அந்த நிலைதான், அமைச்சருக்கு.

காங்கிரஸ் கட்சியிலேயே பலர், தென்னாடு புறக்கணிக்கப்பட்டு வருகிறது, தொழில் வளர்ச்சி சரியான அளவிலும் வகையிலும் ஏற்படவில்லை என்பதை உணர்ந்து குமுறுகிறார்கள். பொதுவாகவே மக்கள், சுயராஜ்யத்தின் பலனை வடக்கே உள்ளவர்கள் சுவைத்து இன்புறுவது போலத் தென்னக மக்கள் இன்புறவில்லை என்பதைத் தெரிந்துகொண்டிருக்கிறார்கள்; சிறிதளவு துணிவு கொண்டவர்கள், காங்கிரஸ் தலைவர்களைக் கேட்கவும் செய்கிறார்கள்; ஏனய்யா, வடக்கே மூன்று பெரிய இரும்புத் தொழிற்சாலைகள் அமைத்தார்களே, இங்கு இவ்வளவு கூக்குரலிட்டும் இன்னும் இரும்புத் தொழிற்சாலை அமைக்கவில்லை என்று கேட்கிறார்கள்.

ஏற்பாடாகி வருகிறது; பரிசோனை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது; நிபுணர்கள் திட்டம் வகுத்துக்கொண்டிருக்கிறார்கள், என்று காங்கிரஸ் தலைவர்கள் எத்தனை முறைதான், பொதுமக்களுக்குச் சமாதானம், கூறுவார்கள்! அவர்களுக்கும் சலிப்பும் ஆத்திரமும் ஏற்பட்டுப்போய், அவர்களே இப்போது டில்லி தேவதைகளைப் பார்த்துக் கேட்கத் துணிந்துவிட்டார்கள்.

ஆயிரம் சொல்லு, தென்னாட்டுக்காக வாதாடுவதிலே, திறமையும் தீரமும் காட்டுபவர்கள் தி. மு. கழகத்தினர்தான்—என்று பொதுமக்களே, மகிழ்ச்சியுடன் கூறிடக் கேட்கும்போது, காங்கிரஸ் தலைவர்களுக்கே, ஒருபுறம் எரிச்சல், இன்னோர்புறம் வெட்கம் கிளம்புகிறது. இதிலென்ன பிரமாதம், நாங்களும்தான் கேட்கிறோம், என்று கூறிவிட்டு, இப்போது டில்லியில் காங்கிரஸ்காரர்கள், சம்பத்தோடு சேர்ந்து குரல் எழுப்பக் காண்கிறோம். ஆனால் அவர்கள் இன்னமும் 'மனு' போடும் 'மகானுபாவர்களாக'வே உள்ளனர்; வேறுவிதமாக அவர்கள் இருப்பதற்கில்லை. ஆனால், இந்த அளவுக்கு அவர்கள் பேசுவதுகூட; வடக்கே உள்ள காங்கிரஸ் தலைவர்களுக்கு, அதிர்ச்சியைத் தருகிறது. ஏதேது, இது கட்சிகளைக் கடந்த ஒரு தேசியப் பிரச்சினையாகிவிடும்போல இருக்கிறதே, பாரதம், ஏகஇந்தியா, என்ற தத்துவமே தகர்ந்து போய்விடும்போல இருக்கிறதே என்று எண்ணுகிறார்கள்; எண்ணும்போதே அச்சம் குடைகிறது.

நிலைமை புரிவதால், அவர்களுக்கு அச்சம் குடைகிறது, பெற்றுள்ள நிலையின் காரணமாக, துணிவு தடித்துப்போயிருப்பதால், இங்குள்ள நிதி அமைச்சருக்கு, எவரைக் கண்டாலும் ஒரு ஏளனம், எதைச் சொன்னாலும் ஒரு அலட்சியம், ஏற்படுகிறது; கூவத்துக்கா, அணைகட்ட? என்று கேட்கிறார், கேலி பேசும் போக்கில்.

'எவ்வளவு முன்னேறி இருக்கிறது, இந்தமாநிலம், எமது திறமைமிகு ஆட்சியினால்; மின்சாரத்தில், உணவு உற்பத்தியில், பாதைகள் அமைப்பில், பகல் உணவுத் திட்டத்தில்; இப்படிப் பல துறைகளில். இப்படிப்பட்ட முன்னேற்றம் கண்டிருக்கும்போது, திரும்பத் திரும்ப வடக்கு வாழ்கிறது, தெற்குத் தேய்கிறது என்று பேசிக்கிடப்பதா, என்று அமைச்சர் வாதாடுகிறார். அவரே நீதிபதியுமாகி, நான் கூறு

வது தவறு; நடவாததை, நடக்கக்கூடாததை, நீதானதை, தேவையற்றதை, நாம் கேட்பது அடாத செயலாகும் என்று தீர்ப்பும் அளித்துவிடுகிறார்!! தண்டனையும் தருகிறார். நான் பொருளற்றது பேசுவேன், அதனைப் பொன்மொழியாகக் கொள்ளவேண்டும்; இதுதான் உமக்கு நாம் அளிக்கும் தண்டனை என்கிறார்.

தம்பி! கிடைக்கிற 'மின்சாரத்தைக்' கிராமப்பகுதிகளிலே, அதிகமான அளவுக்குப் பயன்படுத்துவதிலே 'சென்னை இராஜ்யம்' முன்னணியில் இருக்கிறது, ஆனால், மின்சக்தி உற்பத்தியில், முதலிடமல்ல, சென்னைக்கு. சென்னையில் உற்பத்தியாவதைவிட அதிக அளவு மின்சக்தியை உற்பத்தி செய்துகொண்டிருக்கும் மாநிலங்களில், மேலும், மின்சக்தியை அதிகப்படுத்திக்கொள்ள வாய்ப்புகள் உள்ளன; இங்கு, அந்த வாய்ப்புகள் யாவும் தீர்ந்துபோய்விட்டன; இனி அணு உலைக்கூடம் மூலம்தான், வழி கண்டாக வேண்டும். இங்கு அமைச்சர்கள், அதைக் குறித்துப் பேசத் தவறவில்லை, வாக்களிக்கத் தவறவில்லை, மேலிடம் சென்று கெஞ்சிடத் தவறவில்லை, ஆனால் தம்பி! உனக்குத்தான் தெரியுமே, அணு உலைக்கூடம், இங்கு இல்லை—எது மிக அவசியமோ, அங்கு அது இல்லை; பம்பாய் பகுதியில் அமைக்கத் தீர்மானித்துவிட்டார்கள்! நமது அமைச்சர்கள், என்ன செய்கிறார்கள்? இந்தச் செய்தியை நாட்டுக்கு அறிவிக்கிறார்கள்!! சிறிதளவு ஆயாசமோ, அருவருப்போ, கண்டனமோ தெரிவிக்கக்கூட அவர்களுக்கு அச்சம்! என்ன நேரிட்டுவிடுமோ என்றகவலை. இப்படி இடுப்பொடிந்த நிலையில் இருந்தால், தென்னகத்தின் உரிமைகளை யார்தான் பறித்துக்கொள்ளத் துணியமாட்டார்கள்.

அசாமும், வங்காளமும், காங்கிரஸ்காரர்கள் அரசோச்சும் மாநிலங்கள்; அங்கு உள்ள முதலமைச்சர்கள், தரத்தில், திறத்தில், தகுதியில், இங்கு அரசு நடாத்தும் காங்கிரஸ் தலைவர்களைவிடக் குறைவானவர்கள் அல்ல! ஏகஇந்தியா—அகில பாரதம்—என்ற மயக்கமொழிகளை அவர்களும், மக்களிடம் பேசி வருபவர்கள்தான். ஆனால் தத்தமது மக்களின் உரிமை பற்றிய பேச்சு எழும்போது, எவ்வளவு துடித்துக் கிளம்புகிறார்கள்.

அசாம் அமைச்சரவையைக் கலைத்துவிட வேண்டும், என்று வங்க முதல்அமைச்சர், பேசுகிறார்.

சுதந்திர தினத்தையே அல்லவா, கொண்டாட முடியாது என்று, வங்க அமைச்சரவை அறிவித்தது. வங்க மாநில கவர்னர், சுதந்திர தின விழாவின்போது நடத்தும் விருந்து, வைபவம்கூட அல்லவா, நிறுத்திவிட்டார். டில்லி செங்கோட்டையில், நேரு பண்டிதர் கொடி ஏற்றுகிறார், வங்கத்திலோ, எமது மக்கள் கண்ணீரும் கம்பலையுமாக இருக்கிறார்கள், அவர்களுக்கு அசாமில் இழைக்கப்படும் கொடுமை எமது உள்ளத்தைக் கொதிக்கச் செய்திருக்கிறது, இந்நிலையில், கொண்டாட்டம் ஒரு கேடா! செத்துவிழுகிறார்கள் வங்க மக்கள், தடுத்து நிறுத்தவில்லை, டில்லிப் பேரரசு; இந்த இலட்சணத்தில், சுதந்திர விழா வேறு கொண்டாட வேண்டுமா! முடியாது! மனம் இடம் தராது! மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்! என்று, வங்கக் காங்கிரசு திட்டவட்டமாகக் கூறுகிறது. இங்கு உள்ள காங்கிரஸ் தலைவர்கள்? குட்டக் குட்டக் குனிந்து கொடுக்கும் குணாளர்களாக விளங்குகிறார்கள்!

ஐயனே! அணு உலைக்கூடம் வேண்டும், என்று கேட்கிறார்கள்.

அணு உலைக்கூடமா? ஆமாம்! அதன் அற்புத சக்தி அபாரம். அதை நாமும் உணர்ந்திருக்கிறோம். உமக்கு அணு உலைக்கூடத்தின்மீது ஆசை ஏற்பட்டிருப்பதைக் கண்டு, நாம் மகிழ்ச்சி அடைகிறோம். அந்த அணு உலைக்கூடத்தைக் காண விரும்பினால், பம்பாய் வட்டாரம் சென்று காணவும்; அங்குதான் அணு உலைக்கூடம் அமைக்க ஏற்பாடாகி இருக்கிறது!—என்று டில்லி கூறுகிறது.

மெத்தச் சந்தோஷம்! மிக்க நன்றி!—என்று இவர்கள் கூறுகிறார்கள்.

எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை சம்பந்தமாக, முன்பு, அசாமுக்கும், டில்லித் துரைத்தனத்துக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. தம்பி! இப்போது இங்கே கவர்னராகக் கொலுவிருந்துகொண்டு, அகில பாரதம்பற்றிய அரிய 'உபதேசம்' செய்துகொண்டிருக்கிறாரே, இதே மேதி அவர்கள் அசாமில் முதலமைச்சராக இருந்தார். என்ன நடந்தது என்பதை, இங்குள்ள காங்கிரசாரை, பழைய பத்திரிகையைப் புரட்டிப் பார்த்துத் தெரிந்துகொள்ளச் சொல்லு, தம்பி! அசாம் முழுவதும் முழக்கம்—அகில பாரதம் என்று அல்ல—அசாம் அசாமியருக்கே! என்ற முழக்கம். தேசிய ஒற்றுமை, பாரதப் பண்பாடு என்றெல்லாம் பேசுவது, அசாமை வஞ்சிக்க, புறக்கணிக்க, சுரண்ட, என்பது எமக்குப் புரிந்துவிட்டது. வேண்டாம் இந்தப் போலி உறவு! அசாமுக்கு நீதி கிடைத்தாக வேண்டும்; உரிமை பறிபோக விடமாட்டோம். டில்லிப் பேரரசு ஓரவஞ்சனையாக நடந்தால், அசாம், இந்தியாவிலிருந்து பிரிந்து போய்விடும்! என்று, பேசி, நாடெங்கும் கண்டனக் கூட்டங்கள், ஊர்வலம், வேலை நிறுத்தம், கடை அடைப்பு நடத்தி, டில்லிப் பேரரசை நடுநடுங்க வைத்தது, அசாம். டில்லிப் பேரரசு, அசாமில், எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை ஏற்படும் என்று உறுதி அளித்த பிறகே, குமுறல் அடங்கிற்று.

இங்கு? இரும்புத் தொழிற்சாலை இப்போதைக்கு இல்லையா? சரி.

உரத்தொழிற்சாலை ஏற்படத் தாமதமாகுமா? சரி!

தூத்துக்குடி, சேது சமுத்திர திட்டம், மூன்றாவது திட்டத்தில் சேர்க்கப்படுவது முடியாத காரியம் என்கிறீர்களா? சரி!

எமது பதவிக்கு ஆபத்து இல்லையல்லவா? அது போதும், ஐயனே! அதுபோதும்!!—என்று கூறிக் காலந்தள்ளி வருகிறார்கள்.

பெரும்பாலான காங்கிரஸ் தலைவர்களுக்கு ஒரு பேருண்மை நன்கு தெரிந்திருக்கிறது; பதவியில் இல்லாவிட்டால், நாடு தங்களைத் தேடாது, நாடாது என்ற பேருண்மையைத்தான் குறிப்பிடுகிறேன். காமராஜர் போன்ற ஒருவர் இருவர் தவிர, மற்றவர்கள், பதவியின்றி இருந்த காலத்திலே, யாருக்குத் தெரிந்தவர்களாக இருந்தனர்? நாடு, அவர்களுக்கு அப்போது அளித்த 'மரியாதை' என்ன? பத்திரிகைகளேகூட, அவர்களின் பேச்சுக்கு என்ன இடம் கொடுத்தன? யாருக்குத் தெரியாது!

பதவி போய்விட்டால், மீண்டும் அந்தப் பழைய நிலை தான் என்றபேருண்மை தெரிந்திருப்பதால்தான் அவர்கள் நாட்டுக்குக் கிடைக்கவேண்டியது கிடைக்காது போயினும், நமக்குக் கிடைத்துள்ள பதவி பறிபோகாதிருந்தால் போதும் என்று எண்ணுகிறார்கள்; அந்தப் பதவியைக் காப்பாற்றிக்கொள்வதிலே அவ்வளவு கவலையுடன் இருக்கிறார்கள்.

பதவியில் இருந்துகொண்டு, சிரித்தால் முகம் செந்தாமரை என்றும், கடுகடுப்பாக இருந்தால், கெம்பீரம் என்றும், தருக்குமொழி பேசினால் பாமரர் தலைவன் என்றும் பாராட்ட, ஏடுகள் முன்வருகின்றன! எப்படி அந்தச் சுவையை இழக்க மனம் வரும்? எனவேதான், டில்லிப் பேரரசு எத்தனை முறை, இல்லை! இல்லை! என்று சொன்னாலும், இவர்கள் சரி! சரி! என்று கூறிவிடுகிறார்கள்; அதுமட்டுமல்ல, டில்லிப் பேரரசுகூடக் கூசக் கூறிடும் வார்த்தைகளை வீசி, இந்நாட்டு மக்களின் மனதைப் புண்படுத்துகிறார்கள்.

இங்கு செய்யவேண்டியதனைத்தையும் செய்து முடித்துவிட்டதுபோலவும்,மக்கள்வெற்றிக்களிநடனம் ஆடிக்கிடப்பதுபோலவும், ஒரு நாலைந்துபேர் மட்டுமே வீண் கூச்சலிட்டுக்கொண்டு இருப்பதுபோலவும் நினைத்துக்கொண்டு, கேலிபேசி எதிர்ப்பை ஒழித்துவிடலாம் என்று, கூவத்துக்கு அணைகட்டவா? என்று கேட்கிறார், குறும்புத்தனத்தை விட்டொழிக்கவேண்டிய பருவத்தை அடைந்து, மேலான பதவியிலும் அமர்ந்திருக்கும் அமைச்சர்.

"இராமநாதபுரம் மாவட்டத்தின் பெரும் பகுதிக்கு நீர்ப்பாசன வசதி கிடைக்கும்படி செய்ய, மேல் பெரியாற்றுத் திட்டத்தை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கவேண்டும்.

குந்தாறு, நாராயண காவேரி போன்ற சிற்றாறுகளின் நீரைப் பாசனத்திற்கு உதவும்படி செய்யவேண்டும்.

சிக்கல், குதங்கல், எராகுடி போன்ற பெரிய வாய்க்கால்களைச் சீராக்கவேண்டும்.

முதுகுளத்தூர் தாலூகாவில் உள்ள குளங்களைச் சீரமைக்கவேண்டும்."

தம்பி! ஒரு மாவட்டத்தில் மட்டும், செய்யப்படவேண்டியவை—ஒரே ஒரு துறையில் மட்டும்.

எல்லாம் செய்தாகிவிட்டது, இனிக் கூவத்துக்கு அணைகட்டவேண்டியதுதான் பாக்கி, என்று எக்காளமிடுகிறாரே அமைச்சர், அவருடைய திருப்பார்வையிலே, இராமநாதபுரம் மாவட்டம் படவில்லையா?

முதுகுளத்தூர்த் தாலூகா காங்கிரஸ் மாநாட்டிலே, நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திலிருந்து ஒரு பகுதியைத்தான், மேலே குறிப்பிட்டிருக்கிறேன். காமராஜர் வீரஉரை, விளக்கஉரை, எல்லாம் அளித்தார்—அந்த மாநாட்டில். அவருடைய ஆட்சி செய்யவேண்டியது எவ்வளவு இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுவதுபோலத் தீர்மானங்களைக் காங்கிரஸ் மாநாட்டில் கொண்டுவந்து பேசினர்.

தம்பி! இதை நான் எழுதிக்கொண்டிருக்கும் நேரத்தில், காஞ்சிபுரம் தொகுதியைச் சேர்ந்த கீழம்பி எனும் சிற்றூரின் மருங்கே வாழ்ந்து வரும் ஆதித்திராவிட மக்கள், பிணம் விழுந்தால் எடுத்துச் செல்வதற்குக்கூடப் பாதை வசதி இல்லாத குறையைப் போக்க, துரைத்தனம், எவ்வளவு மனுக்கள் அனுப்பியும், இதுவரை, ஒரு முயற்சியும் எடுத்துக்கொள்ளாதது பற்றி வருத்தத்துடன் வந்து கூறினர்.

இந்த இலட்சணத்தில் காமராஜர், சமுதியில் பேசுகிறார், இப்படிப்பட்ட மாநாடுகள் நடத்துவதால்,

## "இலட்சியப் பயணம்"

"இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களாகிய நாம் செல்லவேண்டியதூரம் எவ்வளவோ நீண்டுகிடக்கிறது. இடைவழியில் கண்ட இரண்டு அற்ப சலுகைகளுக்காக நாம் மகிழ்ச்சிகொண்டாடி நமது நீண்ட பிரயாணத்தைத் தளர்த்திவிடக்கூடாது. தொடர்ந்து பிரயாணத்தை மேற்கொள்வோம். இறுதி இலட்சியம் கைகூடும்வரை சென்றுகொண்டேயிருப்போம்" என்று தமிழரசுத் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பு லேயார்ஸ் பிராட்வேயிலுள்ள நாராயணகுரு மண்டபத்தில் நடைபெற்ற ஒரு வரவேற்புக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

மக்களுக்கு உள்ள குறைகளை நேரடியாக அறிந்து கொள்ள, வாய்ப்பு ஏற்படுகிறது என்று.

பாகல்மேடு இதற்குத்தான் என்றார்! பாதயாத்திரை இதற்காகவேதான், என்றார்! சூறாவளிச் சுற்றுப்பயணம் இதற்காகத்தான் என்றார்! இப்போது மாநாடுகள் நடத்துவது இதற்குத்தான், என்கிறார்.

மாத்திரை தீர்ந்ததேயன்றி, மாந்தம் போகவில்லை என்பார்கள், தாய்மார்கள்.

அதுபோல, இவர், முறை பல காட்டுகிறாரேயன்றி, குறைகள் எங்கே களையப்பட்டன?

இதோ, கீழம்பியில், ஆதித்திராவிட மக்கள், பிணம் எடுத்துச்செல்ல, பாதை இல்லை என்கிறார்கள் — இதை, முதலமைச்சரிடம், ஏழைபங்காளன் என்ற விருது சூட்டிக்கொண்டு உலாவரும் காமராஜரிடம், நான் முன்னின்று நடத்திய தண்டலம் மாநாட்டிலே, மனுக்கொடுத்துத்தெரிவித்துக்கொண்டார்கள், பலன் என்ன? பூஜ்யம்!! அதனால் வெட்கப்படவேண்டியது, யார்? காமராஜர் ஆட்சி அல்லவா!!

கீழம்பிப்பகுதி ஆதித்திராவிடமக்களுக்கு, பிணம் எடுத்துச் செல்லப் பாதை இல்லாவிட்டால் என்ன, உங்கள் உரிமையைக் காத்திட, உமக்குப் பெருமை தேடித்தர, கக்கன் இருக்கிறார் கனம் மந்திரியாக, என்று பேய்ச்சொல்வதா!

அமைச்சர் கேட்கிறார், கூவத்துக்கு அணை கட்டவா! என்று.

பிணம் புதைக்கும் இடம், அதை எடுத்துச் சொல்ல 'வழி' அமைத்துக்கொடுக்கக்கூட, வக்கற்றுக் கிடக்கும், அமைச்சர், வாய்க்கு வந்தபடி பேசிவிட்டால், வளம் பொங்கி வழிந்துவிடும் என்று எண்ணுகிறாரா? வளமும் பொங்கி வழியாது, திறமும் வளராது; இப்படிப்பட்ட பேச்சினால், நாராச நடையினால் நறுமணம் எங்ஙனம் எழும்! ஓங்கி அடித்தேன், ஒடிந்துவிட்டார்கள்! சரியானபோடுபோட்டேன், சாய்ந்தார்கள் கீழே!—என்று வேண்டுமானால், துதிபாடித் திரிபவரிடம் பேசி மகிழலாம். தூய்மை, வாய்மை; செயல்திறமை, என்பவைகளைக் கவனித்து, ஆய்வு நடாத்தும் அறிவாளர்கள், இத்தகைய பேச்சினை, வீரமென்றோ விளக்கமென்றோகொள்ளமாட்டார்கள். இது மற்றொரு 'கூவம்' என்றுதான் கூறுவர்.

கொங்குநாட்டுக் குடிமகன் வாயிலே இருந்து, இந்தக் 'கூவம்' வெளிவரலாமா! நான் பரிதாபப்படுகிறேன்.

தொழில் வளர, செல்வம் கொழிக்க, விலைவாசி கட்டுப்படுத்தப்பட, விஞ்ஞானம் வளர, இன்னபிற பற்றிய தெளிவுரை கூறவேண்டியவரிடமிருந்து, கூவம் கிளம்புவது கண்டால், பரிதாபமாகத்தானே இருக்கும்.

கூவம் ஏன் கெடுநாற்றம் கிளப்புகிறது என்று அறிந்தோரைக் கேட்டேன். நல்ல நீரோட்டம் இல்லாததால், சரியான முறையில் துப்புரவு செய்யப்படாததால், அடைப்புகள் ஏற்பட்டுவிட்டதால், நாற்றம் அடிக்கிறது என்றார்கள்.

பேச்சிலே 'கூவம்' ஏற்படக் காரணம் என்ன என்பதை, விளக்கவா வேண்டும். சிந்தனை வழி அடைபட்டுப் போயிருப்பது, எல்லாக் கருத்துக்களையும் அறிந்து உண்மையைக் காணவேண்டும் என்று எண்ணம் கொள்ளாமல், ஒரே இடத்தில் தமது சிந்தனையைக் கட்டிப் போட்டு வைத்து, உயிரோட்டம் இல்லாமற் செய்துவிடுவது, அலட்சியம், அகம்பாவம், போன்ற அழுக்குகள் படிந்து படிந்து, அறிவுக்குத் தேவையான தெளிவைப் பாழ்படுத்திவிடுவது ஆகியவைகளே, பேச்சுக் 'கூவம்' ஆகிவிடக் காரணம்:

கூவத்துக்கு அணைகட்டச் சொல்லி, அமைச்சருக்கு, ஒருவரும் சொல்லவில்லை; அவர் பேச்சைப் பார்க்கும்போது, "ஐயனே! அமைச்சராக இருக்கும் காலம் வரையிலுமாகிலும், பேச்சிலே, 'கூவம்' புகாமல் பார்த்துக் கொள்வீராக!" என்று கூறத் தோன்றுகிறது.


இவர்தம் ஆட்சியின் சிறப்பினை, உலகுக்கே, எடுத்துக்காட்டச் சிங்களக் கரையிலே ஒதுக்கப்பட்ட 18 தமிழர்களின் பிணங்கள் போதுமே!!

சிங்களவர்; என்ன எண்ணி இருப்பர், தமிழரின் பிணங்களைக் கண்டு; தமிழருக்கு இது சதி! இவர்கள் ஆட்சியில்! இது குறித்து வெட்கித் தலைகுனிந்து வேதனைப்பட்டுக் கிடக்கவேண்டியதிருக்க, வீறாப்புக் காட்டுவதும், பேச்சைக் கூவமாக்குவதுமாக இருக்கிறார்கள்.

இறந்துபட்ட அந்தத் தமிழர்கள், அலைகடலில் தத்தளித்தபோது, சுறா கொத்தியபோது, கைகால் சோர்ந்தபோது, கண் பஞ்சடைந்தபோது, என்னென்ன எண்ணினரோ, எப்படி எப்படிப் புலம்பினரோ, யாரறிவர்!

கடலில், தமிழன் பிணமாகி மிதக்கிறான்—அது கண்டு சிங்களவன், இதோ கள்ளத்தோணி என்று கேலி பேசிச் சிரிக்கிறான், வாழ வைக்கவேண்டிய, பொறுப்பினை நிறைவேற்றும் தகுதி இழந்து போனோமே என்று கண்ணீர் வடிக்கவேண்டிய அமைச்சர், பேச்சைக் கூவம் ஆக்கிக் கொள்கிறார் ஏனோ, பாவம்!

அண்ணன்,



# புதிய மகாத்மா!

மலர் 19] ஆண்டுச் சந்தா ரூ. 8. (4-9-60) தனிப் பிரதி 16-காசு [இதழ் 8

கோலோச்சும் மன்னர்களின் அரண்மனைகள் அவருக்காகத் தயாராக இருந்தும், குடில் அமைத்துக் கொண்டு வாழ்ந்தும், சிற்றரசர்களும் சீமான்களும் 'பேட்டி' காணக்காத்துக் கிடப்பது தெரிந்தும், ஒத்தையடிப் பாதையில் நடந்துசென்று ஏழை எளியோரைக் கண்டு பேசி உறவாடியும், சீமை சென்று பாரிஸ்டர் படிப்பில் தேறியிருந்தும், கிராமக் குடிமக்களின் எளிய வாழ்க்கை முறையை, மேற்கொண்டும்,

மதம் மக்களை ஒன்றுபடுத்த வேண்டும், பக்தி நன்னடத்தைக்கு வழி வகுக்கவேண்டும், ராமும்—ரஹீமும் ஒன்றேதான், என்று எம்மதமும் சம்மதம் என்ற பெருநோக்கு இருக்கவேண்டும் என்று கூறிப், புதிய அன்பு நெறியை எடுத்துக் காட்டியும், காந்தியார், 'மகாத்மா' ஆகி, மக்களின் இதயத்தில் இடம் பெற்றார்.

அவர், 'மகாத்மா' என்ற நிலைபெறத்தான், எல்லோரும் இடமளித்தனரேயன்றி, அவருடைய அறவுரைகளைக் கேட்டுத் தமது தீய நடத்தைகளை, சுயநலத்தை, சுரண்டிடும் போக்கை, நீக்கினரோ, எனில், இல்லை என்பதைத்தான், துக்கம் தோய்ந்திடும் நிலையுடன் எவரும் ஒப்புக்கொண்டாக வேண்டும்.

"உம்மிடம் ஆண்டவன் செல்வத்தைத் தந்திருப்பது, உமது சுகபோகத்துக்காக அல்ல; இல்லாதாரின் இன்னலைத் துடைத்திடவேயாகும்; பெருஞ்செல்வம் பெற்றிருக்கும் நீவிர், 'தர்மகர்த்தாக்கள்'—தரித்திர நாராயணர்களுக்காகவே, வாழவேண்டும், பணியாற்றவேண்டும் என்றுரைத்தார்.

'அருமையான உபதேசம்' என்றனர்; இதனையே நாயன்மார் கூறினர், ஆழ்வாராதிகளும் கூறிப் போந்தனர் என்று விரிவுரையாற்றினர்; செயலிலோ, பழைய சுயநலமே தலைவிரித்தாடிற்று.

வணிகர்கள்' சமுதாயச் சேவகர்கள்—வெறும் இலாப வேட்டைக்காரர் அல்ல—இதை நினைவிலே கொண்டு, வாணிபம் நடாத்துங்கள்; கொள்ளை இலாபம், பதுக்கல், கள்ள மார்க்கட் போன்ற 'பாப' காரியங்களில் ஈடுபடாதீர்கள், என்று உத்தமர் கூறினார். அதனையும் 'உபதேசம்' என்ற முறையில், உச்சிமீது வைத்துக் கொண்டாடினர்; முறையை மட்டும் மாற்றிக்கொண்டார்களில்லை. வெளிப்படையாகக் கூறுவதானால், வெள்ளையர் ஆட்சிக் காலத்திலே இருந்ததைவிட, கள்ளச் சந்தையும் கொள்ளை இலாபமும், இப்போது ஒன்று பத்தாகி, நாட்டு மக்களை நாசப்படுத்துகின்றன.

'மகாத்மா' உபதேசம் செய்வார் — அதற்காக அவருக்கு நாம் 'பூஜை' செய்வோம்—என்ற அளவுடன், சுயநலக்காரர்கள் இருந்துவிட்டனர்.

அவருடைய அறவுரை கேட்டு, திருந்தாத தீயவர்களைத் திருத்திடும் திறமை தமக்கிருப்பதாக எவரேனும் எண்ணுவரேல், அவர்தம் போக்குக்கண்டு எள்ளி நகையாடத்தான் வேண்டும்.

அதிலும் ஆட்சிப் பொறுப்பு ஏற்றுள்ளோர், கள்ளச்சந்தை, பதுக்கல்முறை, கொள்ளை இலாபம் ஆகியவற்றினை நீக்கிவிடும்படி, 'உபதேசம்' செய்யும் புதிய மகாத்மாக்களாகத் தம்மைத்தாமே உயர்த்திக் கொள்ள எண்ணுவது வெறும் கேலிக்கூத்தாகும்.

எனினும், சென்றகிழமை முதலமைச்சர் காமராஜர், அத்தகைய 'உபதேசியாராக'க் காட்சி அளித்திருக்கிறார்.

தென்பாண்டிமண்டலத்திலே நடந்தேறிய காங்கிரஸ் மாநாடு சென்ற காமராஜர், வணிகர்களை விளித்து, பொருள்களைப் பதுக்காதீர்கள் — கள்ள வாணிபம் நடத்தாதீர்கள் — ஏழையின் வயிற்றில் அடிக்காதீர்கள் — பற்றாக்குறையைக் காரணமாகக் காட்டி விலையை ஏற்றிவிடாதீர்கள்—என்றெல்லாம், 'உபதேசம்' செய்திருக்கிறார்.

மகாத்மா முயன்று பார்த்தார்; அவருடைய அருளொழுகும் கண்கள், தவவாழ்க்கை, குறித்து நெஞ்சுநெக்குருகப் பேசினாரே, அவர் அளித்த அறவுரை கேட்டு அதன்படி ஒழுகினார்களில்லை. இதை அறிந்தும், புதிய மகாத்மாவாகக் கோலம்பூண்டு பார்ப்பது, கேலிக்கூத்தன்றி, வேறென்ன?

(16-ம் பக்கம் பார்க்க)



# பொன்னித்தீவின் கன்னித்தெய்வம்

மறுநாள் அரச அவையின் முன்பு நிறுத்தப்பட்டாள் திலகவதி! அவள் வாய் துணியால் கட்டப்பட்டிருந்தது!

"ஒரு பெண்ணைக் கன்னித்தெய்வ ஆலயத்தின் முன்பு இவள் கொலை செய்தாள். காரணம் புரியவில்லை. கேட்டால் மௌனம் சாதிக்கிறாள்" என்றான் குற்ற இலாகா நிர்வாகி.

"கொலை செய்ததைப் பார்த்தவர்கள் யார்?" என்றான் மன்னராக வீற்றிருக்கும் மச்சநாதன்.

"இதோ... இவர்கள்தான்."

"கொலை செய்ததை நீங்கள் பார்த்தீர்களா?"

"கன்னித்தெய்வத்தின் மீது ஆணையாகச் சொல்கிறோம். எங்கள் கண்ணால் பார்த்தோம்."

"அதுபோதும். தாயின் மீது பாரத்தைப் போட்டு மரண தண்டனை விதிக்கின்றேன்" என்றான் மச்சநாதன்.

"விசித்திரமான நீதிமன்றம். விநோதமான தீர்ப்பு!" என்றான் இளந்தாடி அதிகமான்!

"அரச அவையை அவமானப்படுத்தும் நீ, யார்?"

"யாராயிருந்தால் என்ன? குற்றவாளியை விசாரிக்காமலேயே தீர்ப்பளிப்பதுதான் இந்நாட்டுப் பழக்கமோ?"

"குற்றவாளிகள் குற்றத்தை ஒப்புக்கொள்வதானால் நீதிமன்றம் ஏன்? குற்றவாளிகள் குற்றத்தை ஒப்புக்கொள்ளமாட்டார்கள் என்பதை அறிந்தும் அதற்காகக் காலத்தை வீணாக்குவது அறிவுடைமை அல்ல என்பது எங்கள் தத்துவம்."

"நீதியை அவமதிக்கின்றீர்."

"டேய் போ வெளியே! இந்த அவையை அவமதித்தால் தண்டனை! தெரியுமா?

**ப. உ. சண்முகம்**

"இவளா கொலை செய்தாள்? மச்சநாதரே... சிலரைச் சிலகாலம் ஏமாற்றலாம்; ஆனால் பலரைப் பல காலம் ஏமாற்றமுடியாது. அந்தப் பெண்ணை...... சாது பஞ்சநாதர் மகளை... உன் காதலியை... கன்னித்தெய்வவேடமிட்டு இராணியை ஏமாற்றிய வஞ்சியை... கொன்றது நீ!"



"ஆ... நானா...?"

சபை முழுவதும் ஒரே பரபரப்பு ஏற்பட்டது.

"இராணி நந்தினி முக்தியா அடைந்தார்கள்? பாவி! அவர்களைத் தந்திரமாகக் கொன்று கோயிலின் வடபுறம் புதைத்திருப்பவன் நீ!"

"ஆ...! பிடியுங்கள் இவனை...... நம் தெய்வத்தையே அவமதிக்கின்றான்."

"நானா?... தெய்வத்தைக் காட்டி ஏமாற்றிய காலம் இனியும் செல்லாது. இதோ கொலைக் குற்றம் சாட்டியிருக்கும் இவளின் மகளை தூக்கி வந்து உன் மாளிகையில் அடைத்துவைத்துள்ளது போதாதென்று; உன் இரகசியங்களை அறிந்த ஓர் பெண்ணைக் கொலை செய்து அந்தக் கொலைக் குற்றத்தை இவள்மீது சுமத்துகிறாய்!"

"பிடியுங்கள் இவனை... ஏதேதோ உளறுகிறான்."

வீரர்கள் சிலர் வந்தனர். அதிகமானைப் பிடித்துக்கொண்டனர்.

"நான் சொல்வதில் நம்பிக்கை இல்லாதவர்கள் ஆலயத்தின் வடபுறம் போய்ப் பாருங்கள். இராணியின் பிணத்தை அங்கு புதைத்து வைத்திருக்கிறானா இல்லையா என்று."

"இந்த நாயை இழுத்துக் கொண்டுபோய் வெட்டிப்போடுங்கள்" என்றான் மச்சநாதன்.

அரச அவையிலே சலசலப்பு ஏற்பட்டது.

"எங்கே அரசகுரு" என்றனர் பலர். திருதிருவென்று விழித்தான் மச்சநாதன். "எங்கே அரசகுரு?" என்ற குரல் எங்கும் ஒலித்தது. மீண்டும் சலசலப்பு ஏற்பட்டது. "புறப்படுங்கள் ஆலயம் போவோம்" என்றான் ஒருவன். "தாடிக்காரனை விடுங்கள்" என்று பலகுரல்கள் எழுந்தன. வீரர்கள் விடமறுத்தனர். "தாடிக்காரனை அழைத்துவாருங்கள். அவன் சொல்லியது பொய்யென்றால் அவனை அங்கேயே கொல்லுவோம். உண்மையென்றால் குற்றவாளிகளைச் சும்மாவிடக்கூடாது" என்றான் படைத்தலைவன்.

"படைத் தலைவர் சொற்படி கேட்கலாம்" என்றனர் பலர்.

"முடியாது... கூடாது..." என்றான் மச்சநாதன்.

"வருங்கால மன்னரே! தாங்கள் இன்னும் முடிசூட்டப்படவில்லை என்பதை மறவாதீர். எனவே மக்கள் தீர்ப்புப்படி தான் நான் நடப்பேன். எனவே வாருங்கள் ஆலயம் போவோம்" என்றான் படைத்தலைவன்.

"முடியாது!...... வரமுடியாது...... எவரும் அங்கே போகக்கூடாது." என்றான் மச்சநாதன்.

"தங்களின் பிடிவாதம் எங்கள் சந்தேகத்தை அதிகரிக்கிறது!... சரி... அனைவரும் இங்கேயே இருங்கள். நானும் இந்தத் தாடிக்காரனும் போய்ப் பார்த்துவிட்டு வருகிறோம். அதுவரை இங்கிருந்து ஒருவர்கூட வெளியில் போகக்கூடாது. வீரர்களே எவரையும் இங்கிருந்து தப்பவிடாதீர். இதோ வருகிறேன்."

என்று கூறி அதிகமானை அழைத்துக்கொண்டு புறப்பட்டான் படைத்தலைவன். மச்சநாதன் வெறி பிடித்தாற்போல் வீற்றிருந்தான். மெள்ள எழுந்தான்.

"போகாதே" என்று மக்கள் கூச்சலிட்டனர். மீண்டும் போக முயன்றான். மக்களில் சிலர் ஓடி அவனைப் பிடித்துக்கொண்டனர். சிறிது நேரத்திற்கெல்லாம் இராணி நந்தினியின் பிணத்தைத் தூக்கி வந்தான் படைத்தலைவன்.

பிணத்தைப் பார்த்ததும் மக்கள் கொதிப்படைந்தனர். மச்சநாதனை ஆளுக்கு ஆள் அடித்தனர். கீழே சுருண்டு வீழ்ந்து செத்தான் மச்சநாதன்!



அதிகமான் திலகவதியை விடுவித்துப் படைத்தலைவனை அழைத்துக்கொண்டு தேன்மொழியைத் தேடி ஓடினான். கண்டான் அவளை. தேன்மொழி தன் தாயைக் கட்டிப் பிடித்துக்கொண்டு அழுதாள்.

"இந்த ஆள்தான் நம்மைக் காப்பாற்றியது என்று அதிகமானைக் காட்டினாள் திலகவதி. தேன்மொழி பார்த்தாள்......உற்றுப்பார்த்தாள்......" "ஆ...நீங்களா" என்றாள் தேன்மொழி. திலகவதியும் உற்றுப்பார்த்தாள் "அதிகமானா" என்றாள்.

"என்னை எப்படி உங்களுக்குத் தெரியும்?" என்றான்.

"பதினைந்தாண்டு உன் குகைக் கைதியாக இருந்த ஊமையன் நான்"

"ஆ...உண்மையாகவா?"

ஆமாம். அதுமட்டுமல்ல, நான்தான் தேன்மொழியின் தாய். இவள் வளர்ந்தது தான் வேழநாடு, பிறந்தது வேங்கிநாடு!"

இப்படி, நடந்தவைகளையெல்லாம் கூறினாள் திலகவதி!

"சரி வாருங்கள்" என்றான் படைத்தலைவன். அனைவரும் கீழே சென்றனர்.

இதற்குள் அரச அவையில் பெருங்கூட்டம் கூடிவிட்டிருந்தது. அதிகமானைக் கண்டதும் மக்கள் அமைதியாக நின்றனர்.

"பெரியோர்களே! நமக்கு இந்த உண்மைகளையெல்லாம் சொன்னவர் இவர்தான். இவர் பெயர் அதிகமான்"

"அதிகமான் வாழ்க" என்று வாழ்த்தினர் அனைவரும்.

"இவர் ஆண்டியல்ல. வேழநாட்டு இளவரசர். இந்த அம்மாள் வேங்கிநாட்டு இராணி! இவர்கள் வேங்கி நாட்டு இளவரசி".

மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் தெரிவித்தனர். அரசியின் பிணத்தை மரியாதையோடு அடக்கம் செய்ய ஏற்பாடுகளாயின.

பொன்னித்தீவின் படைத்தலைவனிடம் விடைபெற்றுச் சென்றான் அதிகமான்.

"எங்கள் நாட்டைத் தாங்கள் கொடியவர்களிடமிருந்து மீட்டுத் தந்தீர். தங்கள் நாட்டைமீட்க நான் உதவிபுரிகிறேன்" என்றான் அவன்.

"தங்கட்கு மிக்க நன்றி. எங்கட்குத் தேவையானபோது தெரிவிக்கிறேன் அப்போது வாருங்கள். இப்போது படை திரட்டக் கொஞ்சம் உதவி தேவை—அது செய்தால் போதும்" என்றான். பெற்றான் பொற்குவியலை. புறப்பட்டான் திலகவதியையும் தேன்மொழியையும் அழைத்துக்கொண்டு வேழநாடு நோக்கி.

அடைந்தான் வேழ நாட்டை. வேழ நாட்டை ஆலகாலனால் பிடிக்க முடியவில்லை என்பதை அறிந்தான். நாட்டை நிர்வகிக்கும் அமைச்சரைச் சந்தித்தான். படை திரட்ட இருவரும்

பதிவு எண். எம். 4642 | தொலைபேசி எண்.... அலுவலகம் 15 இல்லம் ...118

னர். திரட்டினான் பெரும்படையை. தொடுத்தான் போரை வேங்கி நாட்டான்மீது.

வெறுப்படைந்திருந்த வேங்கி நாட்டு மக்கள் ஆலகாலனைக் காட்டிக் கொடுத்து விட்டனர். ஆலகாலன் கைதானான். வேங்கி நாட்டு மன்னனையும் தன் தந்தையையும் மீட்கப் பாதாள அறை சென்றான். கண்டான் தன் தந்தையை. "அப்பா" என்று கட்டிப் பிடித்தான். கண்ணீரால் அவரை மூழ்கடித்தான். ஒன்றுமறியாத வேழ நாட்டு வேந்தன் திகைத்தான்.

"அப்பா நான்தான் கள்ளர்களால் தூக்கிச் செல்லப்பட்ட தங்கள் மகன்" என்றான். தந்தையின் பிடியில் மகன் அகப்பட்டான். கண்ணீரில் நனைந்தனர் இருவரும்.

"எங்கே வேங்கி நாட்டு வேந்தர்" என்றான்.

"யாரது?" என்றான் ஓர் குருடன். அவரைப் பார்த்ததும் அதிர்ச்சியடைந்தான் அதிகமான். இருவரையும் அழைத்துக் கொண்டு வெளியில் வந்தான்.



இதற்குள் திலகவதியும் தேன்மொழியும் வந்து சேர்ந்தனர். கணவனைக் குருடராகக் கண்ட திலகவதி கதறினாள். தேன்மொழியைத் திலகவதி பிடித்துக் கொடுத்தாள் தன் கணவனிடம். மகளின் கரங்களைப் பிடித்துக் கொண்டு ஆனந்தக் கண்ணீரில் நனைந்தான்.

நாட்டு மக்களைக் கூட்ட ஏற்பாடாகியது. கூடினர். கண்டனர் தங்கள் குருட்டு மன்னனை. கண்ணீர்விட்டனர். ஆலகாலனையும், கார்க்கோடனையும் தூக்கிலிட்டனர்.

வேங்கி நாட்டுப் பொற்கொடியை வேழ நாட்டு இளவரசன் கையில் ஒப்படைத்தனர்!

காதலர்கள் கூடி விளையாடும் போது நமக்கென்ன அங்கே வேலை!

முற்றும்.

13-ம் பக்கத் தொடர்ச்சி

உபதேசம்கேட்டு, உள்ளம் திருந்திவிட இயலுமேல், காந்தியாரின் பேச்சே போதும்.

அவருடைய உபதேசத்துக்கு இல்லாத ஆற்றல், அவருடைய பேச்சுக்குக் கிடைக்காத மதிப்பு, தம்முடைய உபதேசத்துக்குக் கிடைத்துவிடும் என்று, எண்ணிடும் துணிவு, காமராஜருக்கு, எப்படித்தான் வந்ததோ, நாமறியோம்!!

ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்கள். கள்ளச் சந்தையைக் கண்டறிந்து, கடும் நடவடிக்கை எடுப்பதிலே திறமையைக் காட்டவேண்டும்; உபதேசம் அளிப்பதில் அல்ல. பதுக்கலைக் கண்டறிய, முறைகளை வகுக்கவேண்டும்; பற்றாக்குறையைப் போக்கிட வேண்டும்; இதைச்செய்யாது, 'உபதேசம்' பேசுவது எற்றுக்கு! என்ன பலன் காணமுடியும்!

கள்ளமார்க்கட் நடத்துபவர்களைப் பிடித்திழுத்துக் கூண்டிலேற்றி இருந்தால், மற்றவர்கள், அந்த இழிசெயல், ஆபத்தைத்தரும் என்பதை அறிந்து அடங்கிக்கிடப்பர். அதனைச் செய்திடத்தான், அரசு; அறவுரை அளித்திட அல்ல.

ஊழலான நிர்வாகம் நடத்திக்கொண்டு, ஊர் சிரிக்கும் விதமான முறை கேடுகளைக் கையாண்டு கொண்டுள்ள துரைத்தனம் இது என்பதை, அவ்வப்போது வெளியிடப்படும் கணக்காய்வுக் குழுக்களின் அறிக்கைகள் எடுத்துக் காட்டுகின்றன.

இந்நிலையில், காமராஜர் 'புதிய மகாத்மா' என்று தம்மை எண்ணிக்கொண்டு, உபதேசம் செய்வதால், உருப்படியான பலன் ஏதும் ஏற்படாது.

விழிப்பாக இருத்தல், உடனடியாக நடவடிக்கை எடுத்தல், ஊர் மக்களின் மனக் குமுறலைக் கண்டறிதல், அதற்கு மதிப்பளித்தல், இவைதாம், ஆட்சியாளர்கள் மேற்கொள்ள வேண்டிய முறைகள்—மகாத்மாத் தன்மை அல்ல!!

காஞ்சீபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.